A-rise Series

# தந்தையை காணச்செல்லும் எலக்ஸ்




விரிவாக்கம் N.M. Lokman

## உருவாக்கியவர்களைப் பற்றி

சிங்கப்பூர் பின் நல சேவை சங்கம் கூட்டு முயற்சியுடன், நன்யாங் பலதுறைக் கல்லூரியில் சமூக அறிவியல் துறையின் சமூகச் சேவைத் துறை டிப்லோமா பயிலும் மாணவர்களில், ஒரு குழுவால் இப்புத்தகம் எழுதப்பட்டது. குழு மாணவர்கள்:


Ho Chen Mun, Vivian
Low Zi Ying
Muhammad Safwan Sallehan Bin Mohamad Ishak
Nor Djannah Binti Djohan
Stacey Soh Jie Wei
Stephanie Chay
Tan Peishan
Vinosha Sivanathan


rise

Reintegrating through Inspiration, Support, and Empowerment

# நன்றியுரை

இந்த வெளியீட்டுக்காக எங்களுக்கு உதவியவர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். இந்த வெளியீட்டு பணியை நாம் மேற்கொண்டதிலிருந்து எங்களுக்கு நல்லாதரவும் உறுதுணையும் பொறுமையோடு வழங்கிய உங்கள் அனைவருக்கும் நன்றி. கிழே குறிபிடப்பட்டவர்டளிடம் நாம், விலைமதிப்பற்ற பல விஷயங்களை கற்றுக் கொண்டோம்.

நாம் மிகவும் ஆழமாக விரும்பும் ஒரு ஒப்படைப்பு பணியை செய்ய அனுமதித்த எங்கள் பள்ளி, நன்யாங் பலதுறை கல்லூரிக்கு எங்கள் முதற்கண் நன்றிகள். இவர்களுடைய நல்லாதரவு இல்லாமல் நாங்கள் இப்பணியை மேற்கொண்டிருக்கமுடியாது.

சிங்கப்பூர் பின் நல சேவை சங்கத்திற்கு **(Singapore After-Care Association (SACA)** எங்கள் இதயங்கணிந்த நன்றிகள். இந்நூல் தொடங்கியதிலிருந்து அவர்களது அயராத ஆதரவும் வழிகாட்டுதலும் இந்நூல் வெளியாவதில் மட்டுமல்லாமல் எங்கள் கற்றலுக்கும் பேருதவியாக இருந்தது. இதில் **Prem Kumar, Lin Mingjie** மற்றும் **Aishikin Ismail** அவர்களுக்கு எங்களின் சிறப்பு நன்றிகள். எங்களின் மேல் நீங்கள் வைத்திருந்த நம்பிக்கைக்கும் எங்களின் பணிக்கு உதவ நீங்கள் செலவிட்டு அளவில்லா நேரத்திற்கும் மிக்க நன்றி.

எங்கள் மேற்பார்வையாளர் **Saraswathi Rajakrishnan** அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக. எங்களின் இந்த இறுதி ஆண்டு ஒப்படைப்புக்காக அவர் எங்களுக்கு ஆதரவாக இருந்தார். அவர் பொறுமையுடன் எங்களின் விருப்பங்களை தெரிந்துகொண்டு எங்களுக்கு பக்க பலமாக இருந்தார். சமுக சேவை பிரிவில் நாம் தெரிந்துக்கொள்ள வேண்டியவற்றை கற்றுத்தந்து, அதை மேம்படுத்த வழி வகுத்து தந்ததுக்கும், மாணவர்களாக எங்கள் தனிப்பட்ட வளர்ச்சிக்கும், எதிர்கால சமூகப் பணியாளர்களாக நாம் ஆவதற்கும் ஊன்றுகோளாக இருந்தமைக்கும் எங்களின் பணிவான நன்றிகள்.

எங்கள் கதையில் வரும் கதாபாத்திரங்களுக்கு உயிர் கொடுத்த விளக்க வரையாளர் **Nursabrina Md L** அவர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றி. டிப்லோமா எனிமேஷன் துறை மாணவரான அவர் தனது பாடங்களுக்கும் பணிகளுக்கும் நடுவே எங்களுக்கு உதவ முன்வந்தார்.

எங்கள் பதிப்பாளர் **Santha Devi Sivanathan.** அவர்களுக்கு எங்கள் இதயங்கனிந்த நன்றிகளை தெரிவிக்கிறோம். அவர்களின் அயராத உழைப்புக்கு மிக்க நன்றி.

இறுதியாக எங்களது சின்னத்தை உருவாக்க உதவிய **Jasmine Yap** அவரிகளுக்கு எங்களின் நன்றி.


எலக்ஸின் வகுப்பு மாணவர்கள் ஒரு நிகழ்ச்சி நடத்தப்போகிறார்கள். மாணவர்கள் பாட்டு பாடி நடனம் ஆடுவார்கள்.

“இந்த நிகழ்ச்சிக்கு உங்கள் எல்லோருக்கும் இரண்டு நுழைவுச்சீட்டுகள் கொடுக்கப்படும். நீங்கள் உங்கள் பெற்றோரை அழைத்து வரலாம்” என்றார் திருமதி சிங். மாணவர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள்.

ஆனால் எலக்ஸ்...
“அப்பாவால்
வரமுடியுமா?”... என்று
யோசித்தான்.



திருமதி சிங் நுழைவுச்சீட்டுகளை கொடுத்துக்கொண்டிருக்கும்போது, எலக்ஸின் நண்பன், இர்பான், “உன் பெற்றோர்கள் வருவாங்களா?” என்று கேட்டான்.

“என் அப்பா வெளியூருக்கு போயிருக்கிறார் என்று என் அம்மா சொன்னாங்க. அவர் எப்போது வருவார் என்று எனக்கு தெரியாது” என்று எலக்ஸ் கூறினான்.

“ஓ! அவர் எங்க போயிருக்கிறார்?” என்று இர்பான் கேட்டான்.

“எனக்கு உண்மையாகவே தெரியாது. அம்மா என்னிடம் சொல்லமாட்டுராங்க” என்றான் எலக்ஸ்.
“உன் அப்பா எங்கே என்று உனக்கு எப்படி தெரியாமல் இருக்கலாம்? என்றான் இர்பான்.

மற்றவர்களைவிட நான் வித்தியாசமானவனா... என்று எலக்ஸ் யோசிக்க ஆரம்பித்தான்.





டிக்கெட்டுகளை அம்மாவிடம் காட்டி, “அம்மா. நான் அப்பாவை அழைத்து என் பள்ளி நிகழ்ச்சிக்கு வந்து என்னை பார்க்கச் கேட்கலாமா? “ என்றான் எலக்ஸ்.

“இல்லை. அவர் வெளியூரில் இருக்கிறார்” என்றார் அம்மா.
“அப்படியென்றால் நான் அவருக்கு குருஞ்செய்தி அனுப்பலாமா?” கேட்டான் எலக்ஸ்.
“இல்லை. முடியாது” அம்மா சொன்னார்.
“ஏன் முடியாது?” என்று கேட்டான் எலக்ஸ்.

“முடியாதென்றால் முடியாது! நான் சொல்லிவிட்டேன்!” என்று கண்டிப்பான குறலோடு சொன்னார் அம்மா.





இப்போதெல்லாம் அப்பா வீட்டுக்கு வருவதே இல்லை. எங்கே போனார்? ஏன் அவர் வீட்டுக்கு வருவதில்லை?

இப்போதெல்லாம் அம்மா ரொம்ப நேரம் வேலை செய்வதால் என்னுடன் விளையாட அவருக்கு நேரம் கிடைப்பதில்லை. முன்பெல்லாம் ரொம்ப சாப்பாடு சமைப்பாங்க. இப்ப அதுவும் இல்லை.

என்நேரமும் சோர்வாகவே காணப்படுகிறார்.

சில நேரம் கவலையாகவும் இருக்கிறார். சில நேரம் கோபமாகவும் இருக்கிறார். ஏன் அம்மா என்னிடம் ஒன்றும் சொல்லமாட்டார்?





அடுத்த நாள், எப்போதும் போல எலக்ஸ் பள்ளியில் அவன் நண்பர்களுடன் விளையாடுகின்றான். ஆனால் அன்று, வழக்கம் போன்ற நாளில்லை. இர்பான் மற்ற மாணவர்களிடம் எலக்ஸின் அப்பாவைப்பற்றி கெட்டதாக கூறிவிட்டான். எல்லாரும் சேர்ந்து எலக்ஸை கேலி செய்தார்கள்.

அவர்கள் எலக்ஸின் அப்பாவுக்கு அவன் மேல் அக்கறையும் அன்பும் இல்லாததால்தான் நிகழ்ச்சிக்கு அவரால் வரமுடியவில்லை என்று கேலி செய்தனர்.

எலக்ஸ் மிகவும் வேதனை அடைந்தான்.

அப்பாவுக்கு உண்மையாகவே அவன்மேல் அக்கறை இல்லையா? என்று அவன் யோசித்தான்.

தூரத்திலிருந்து திருமதி சிங் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தார்.



திருமதி சிங் எலக்ஸிடம் அவன் நண்பர்கள் அவனை கேலி செய்ததைப் பார்த்ததாக அவனிடம் கூறினார். அவனுக்கு எதாவது பிரச்சினை உள்ளதா என்று கேட்டார்.

கவலையுடனும் கோபத்துடனும் எலக்ஸ் கூறினான்: “என் அப்பா இப்போதெல்லாம் வீட்டுக்கு வருவதே இல்லை. அவர் எங்கே போனார் என்று எனக்கு தெரியாது. அம்மாவும் என்னிடம் சொல்ல மாட்டுராங்க. அப்பா எங்கேயோ போய் விட்டாரா?





அன்று திருமதி சிங் எலக்ஸின் அம்மாவிடம் பேசினார்.



அன்று எலக்ஸ் வீடு திரும்பியதும், திருமதி சிங் தன்னிடம் பேசியதாக அம்மா சொன்னார். பள்ளியில் நடந்தவற்றை எல்லாம் திருமதி சிங் கூறியதாக சொல்லி, எலக்ஸ் நலமாக இருக்கிறானா என்று கேட்டார்.

“அப்பா எங்கே? ஏன் என்னிடம் சொல்ல மாட்டுறீங்க?!” என்று அழுதான் எலக்ஸ்.

சில நிமிடங்கள் தயங்கிய அம்மா, எலக்ஸிடம் உண்மையைச் சொல்ல முடிவு செய்தார் அம்மா. “எலட்ஸ்... உட்கார், உன்னிடம் நான் ஒன்று சொல்லவேண்டும். அப்பா சிறைச்சாலையில் இருக்கிறார்” என்று அம்மா விளக்கினார்.

“அப்பா தவறு செய்தார். அவர் சட்டத்தை[1] மீறினார். அதற்கு அவர் தண்டிக்கப்பட்டார். நீ வகுப்பு நேரத்தில் உண்டால் திருமதி சிங் உன்னை தண்டிப்பதர்க்காக, வகுப்பு விதி முறைகளை 10 தடவை எழுத சொல்வார்கள். இல்லையா?அதைப் போல தான், அப்பாவிற்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதில் உன் மீது எந்த தவறும் இல்லை.”



[1] குறிப்பு: சட்டம் என்றால் என்ன: சட்டம் என்பது எல்லா நாட்டு மக்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள். பின்பற்றாவிட்டால் அவர்கள் தண்டிக்கப்படுவர்.

“சிறைச்சாலை என்பது தவறு செய்பவர்களை தண்டிப்பதர்க்காக பிடித்து வைக்கப்படும் ஒரு இடம்.

அவர் இன்னும் சிறிய நாட்கள் அங்கு இருப்பார். அங்கு, அவர் எது சரி எது தவறு என்பதை கற்றுக்கொள்வதோடு தான் செய்த தவறை பற்றி சிந்திக்கவும் அவரை அங்கு வைத்திருக்கிறார்கள்.
இருப்பினும்,
இன்னும் உன்மீது
அன்பும் அக்கறையும்
வைத்திருக்கிறார். கூடிய
விரைவில் வீட்டுக்கு
வந்துவிடுவார்” என்றார்
அம்மா.





எலக்ஸ் படுக்கையில் புரண்டான். அவனுக்கு தூக்கம் வரவில்லை. அவன் மனதில் பற்பல கேள்விகள்.

அப்பா வீட்டுக்கு வந்துவிடுவார் என்று சொன்னார். ஆனால் எலக்ஸுக்கு அவரை இப்பவே பார்க்க வேண்டும் போல் இருந்தது.

சிறைச்சாலை எப்படி இருக்கும்?
அப்பா அங்கே நலமாக இருக்கிறாரா?
அப்பாவுக்கு அங்கே நண்பர்கள் இருப்பார்களா?
அப்பாவுக்கு பயமாக இருக்குமா?

எலக்ஸ் அவன் அப்பாவின் பிரிவால் வாடினான்.



அடுத்த வாரம் எலக்ஸும் அவன் அம்மாவும் திருமதி சிங்-ஐ சந்திக்க பள்ளிக்குச் சென்றார்கள். எலக்ஸின் கவலையைப் பற்றி பேசினார்கள். கவலையைத் தீர்க்க அவன் என்னென்ன செய்யலாம் என்பவற்றை பட்டியல் போட்டார்கள்.





## எலக்ஸ் என்ன செய்யலாம்[2]

I. மனதில் வரும் எண்ணத்தைப் பற்றி படம் வரைவது அல்லது எழுதுவது.

2. உடற்பயிற்சி அல்லது விளையாட்டில் சேருவது

3. நம்பிக்கை உள்ளவரிடம் பேசுவது
   - I. அலோசகர்
   - II. நம்பிக்கையுள்ள ஒரு பெரியவர்
   - III. டிங்கல் ஃபரெண்ட் திங்கள்-வெள்ளி 2.30PM- 5PM 1800-2744-788

4. அப்பாவுக்கு கடிதம் எழுதுவது

5. புறப்பாட நடவடிக்கையில சேர்வது
   - I. ஓவியம்/ படம் வரைதல்
   - II. புத்தகம் வாசித்தல்
   - III. நடனம்

[2] ஒரு குழந்தையின் கவலையை தீர்க்க உதவும் யுத்திகளைப் பற்றி கூடுதல் தகவல் அறிய, எழு: முதல் முறைக் குற்றவாளிகளின் குடும்பத்தாருக்கென வழிகாட்டி, என்னும் நூலை வாசித்து பார்கலாம்.

எலக்ஸ் அப்பாவுக்கு கடிதம் எழுதுகிறான். அதற்கு பதில் கடிதம் கிடைத்ததைக் கண்டு பூரிப்பு அடைகிறான்.






அம்மாவிடம் தன் உணர்வுகளை பகிர்கிறான். இது அவனுக்கு ஆறுதல் தருகிறது.



ஒரு விளையாட்டில் சேர்கிறான். புது நண்பர்களின் நட்பு அவனின் தனிமையை குறைக்க உதவுகிறது.



சொல்ல முடியாதவற்றை அவன் படமாக வரைகிறான்.



ஒரு நாள் எலக்ஸிடம் அம்மா கேட்டார், “மகனே! உன் அப்பாவை பார்க்க விரும்புகிறாயா?”

மிக்க மகிழ்ச்சியுடன் எலக்ஸ், “ஆம்! இப்பவே போவோம்!” என்று பதிலளித்தார்.





ஆனால், நாம் விரும்பிய நேரத்துக்கு எல்லாம் போக முடியாது என்று அம்மா சொன்னார்.
ஒரு மாதத்தில் இரண்டு தடவை தான் அவரைப் போய் பார்க்கலாம் என்றார் அம்மா.
இது எலக்ஸுக்கு கவலையாக இருந்தாலும் அவன் அப்பாவை பார்க்க ஆவலாக இருந்தான்.

அப்பாவை பார்க்கும் நாளை அம்மா தேர்வு செய்தார். அந்த தேதி இப்போது எலக்ஸுக்கு தெரிந்துவிட்டது. அப்பாவைப் பார்க்க 20 நிமிடங்கள் மட்டுமே கொடுக்கப்பட்டதாக அம்மா எலக்ஸிடம் கூறினார். ஏனெனில் அவரிடம் சொல்ல விரும்புவதை எலக்ஸ் தயார் செய்து வைக்க வேண்டும்.

எலக்ஸ் அப்பாவுக்கு ஒரு கடிதம் எழுதி விருந்தினர் இடத்திலுள்ள தபால் பெட்டியில் வைக்க முடியும். சிறை அதிகாரிகள் அந்த கடிதத்தை பார்த்துவிட்டு அப்பாவிடம் கொடுப்பார்கள்.

சிறைச்சாலையின் உள்ளே எலக்ஸ் உடல் ஸ்கேன் போன்ற பாதுகாப்பு சோதனைக்குச் செல்ல வேண்டும். அப்பாவை பார்க்க அந்த அறைக்கு உள்ளே எலக்ஸ் கையில் எதையுமே கொண்டு போகக் கூடாது.





இன்று அப்பாவை பார்க்கவேண்டிய நாள். எலக்ஸ் குதூகலத்துடன் அப்பாவை பார்க்க ஆவலாக இருக்கிறான்.





எலக்ஸும் அம்மாவும் அவர்களுடைய தருணத்திற்காக காத்திருந்தனர். பொறுமையுடன் காத்திருந்த எலக்ஸின் மனதில் பல கேள்விகள் எழுந்தன. “இப்போது அப்பா எப்படி இருப்பார்? அப்பாவுக்கு நண்பர்கள் இருப்பார்களா? அப்பா என்னை பார்க்கவேண்டும் என்ற ஏக்கத்துடன் இருப்பாரா?”

பாதுகாப்பு சோதனைகளுக்குள் நடந்து போக எலக்ஸ் சற்று பயந்தான்.





அறைக்குள் சென்று அப்பா உள்ளே வர காத்திருந்தார்கள். முதலில் ஒரு மாதிரியாக இருந்தது. எலக்ஸுக்கும் அப்பாவுக்கும் இடையே கண்ணாடித் தடுப்பு இருந்தது. எலக்ஸினால் அப்பாவை கட்டிப் பிடிக்க முடியவில்லை. அப்பாவை தொடக் கூட முடியவில்லை. அவருடன் பேசத் தான் முடிந்தது.

இருந்தாலும் எலக்ஸுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அப்பா உள்ளே வந்தவுடன், அப்பாவிடம் எல்லாவற்றையும் சொன்னான். அப்பாவின் பிரிவினால் ஏற்பட்ட கவலையைப் பற்றி தொடங்கி அவனுக்கு மிகவும் பிடித்த கேலிச் சித்திரம் வரை எல்லாம் பேசினான். அப்பாவை மறுபடியும் பார்க்க முடிந்ததை எண்ணி மிகவும் மகிழ்ச்சி அடைந்தான்.

நிமிடங்கள் முடிந்தது, விடை பெற்றுக் கொள்ளும் நேரம் வந்தது.






சில நேரம் எலக்ஸ் அப்பாவை நேரில் பார்க்கிறான். சில நேரம் எலக்ஸ் அப்பாவை தொலைகாட்சி பெட்டியின் மூலம் பார்த்து பேசுகிறான். இதைத் டெலி-விசிட் (தொலை சந்திப்பு) என்பார்கள்.

கொடுத்த நேரம் முடியும்போது விடை சொல்வது எப்போதும் கவலையாக இருக்கும். ஆனால் எலக்ஸுக்கு தெரியும் இந்தப் பிரிவு நிரந்தரம் இல்லை என்று.

அப்பா இன்னும் கொஞ்ச நாட்களுக்கு அங்கே இருக்கவேண்டும். அது எலக்ஸுக்கு கவலையாக இருந்தது. ஆனால் அப்பா தன்னிடம் இன்னும் குறையாத அன்பு வைத்திருக்கிறார் என்பது எலக்ஸுக்கு தெரியும்.

# வளங்கள்

De Masi, M. E., Benson, D. A., & Bohn, C. T. (2010).
*Children with Incarcerated Parent: A Journey of Children, Caregivers and Parents in New York City.*
Retrieved from http://ccf.ny.gov/files/2413/7968/3887/ChildIncarceratedParents.pdf

Eccles, J. E. (1999).
The Development of Children Ages 6 to 14. The Future Of Children, 9(2), 30-42. doi:10.2307/1602703

Harris, A. (2014).
*Supporting your child when a parent is in jail.* Retrieved May 21, 2017 from https://tgn.anu.edu.au/wp-content/uploads/2014/10/Supporting-yourchild-when-a-parent-is-in-jail_0.pdf

Jarrati, C. J. (2011, September 25).
*Helping Children Cope with Separation and Loss.* Retrieved June 6, 2017 from https://childdevelopmentinfo.com/childpsychology/anxiety_disorders_in_children/helping_children_cope_with_separation/#.WXA6g9N976Z

Murray, J., & Farrington, D. P. (2008).
The Effects of Parental Imprisonment on Children. *Crime and Justice: A Review of Research,* 37, 133-206. doi:0192-3234/2008/0037-0002

Nesmith, A., & Ruhland, E. (2008).
Children of incarcerated parents: Challenges and resiliency, in their own words. *Children and Youth Services Review,* 30(10), 1119-1130. doi:10.1016/j.childyouth.2008.02.006

Parke, R. D., & Clarke-Stewart, K. A. (2002).
Effects of Parental Incarceration on Young Children. Paper presented at the "From Prison to Home" Conference, Bethesda, MD. Retrieved from https://aspe.hhs.gov/basic-report/effects-parentalincarceration-young-children

Prison Fellowship. (2014, March 24).
FAQs About Children of Prisoners. Retrieved May 21, 2017 from https://www.prisonfellowship.org/resources/trainingresources/family/ministry-basics/faqs-about-children-ofprisoners/#children_feelings

Sesame Workshop. (2013, April 30).
*Little Children, Big Challenges: Incarceration.* Retrieved April 26, 2017 from http://www.sesamestreet.org/sites/default/files/media_folders/Images/Incarceration_Guide.pdf

Singapore After-Care Association. (2016).
Effects of Parental Incarceration on Children: Considerations for Singapore. *Singapore After Care Association.* Retrieved from www.saca.org.sg/resources/ck/files/.../lit_scan3_children_of_incarcerated_parent s.pdf

Snyder, M. G. *How to Explain Prisons and Jails to Children.* Retrieved from http://www.ambassadorsforhope.com/aa_how_to_explain_prisons_and_jails_to_children_lancaster_version.pdf

The National Resource Center on Children and Families of the Incarcerated. (2016, November 28).
*Children of Incarcerated Parents Library.* Retrieved July 2, 2017 from http://nrccfi.camden.rutgers.edu/resources/library/children-of-prisonerslibrary/

Wyse, J. (n.d.). *A Guide to Helping Children with a Parent in Prison.* Retrieved from http://www.sbbh.pitt.edu/files/audio/podcasts%202113%20fall%202010/Hlpng_Chldrn_w_Prnt_in_Prison_Wyse.pdf


ஒரு குழந்தையை உதவுவதற்கான கூடுதல் தகவல் அறிய,

"எழு: முதல் முறைக் குற்றவாளிகளின் குடும்பத்தாருக்கென வழிகாட்டி"




"1045 நாட்கள்: ஒரு பதின்ம வயது இளைஞனின் நாட்குறிப்பு"



எலக்ஸின் அப்பா எங்கே?

எலக்ஸின் அம்மா அவனிடம் ஒன்றும் சொல்லமாட்டார்.

அது ஏன் என்று எலக்ஸுக்கு தெரியவில்லை.

எலக்ஸ் ஏன் இவ்வாறு உணர்கிறான்?
எலக்ஸ் தன்னை தேற்றிக்கொள்ள என்ன செய்யலாம்?

அவனை சுற்றி இருப்பவர்களின் உதவியோடு அவன் தெரிந்துக்கொள்கிறான்.

rise

இது ஒரு கூட்டு முயற்சி

NYP NANYANG POLYTECHNIC

SACA